முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No.720/2019

Witness DW 1

பெயர் / துரைவேல்

**த.பெ - சோமு**

**இன்று (25.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால ராதாகிருஷ்ணன் என்பவரிடம் இரண்டரை சென்டு நிலம் வாங்கி இருந்தேன் தற்போது அந்த இரண்டரை சென்டு நிலம் இல்லை என்று சொல்கிறார்கள் வாதி எத்தனை சென்டுக்கு வழக்கு போட்டு உள்ளார் என்றால் 15 சென்ட் வழக்கு போட்டு உள்ளார் அதில் நான் இரண்டு சென்டு வாங்கி உள்ளேன் சொத்துக்கு சர்வே எண் தெரியுமா என்றால் 167.3 டி வாதி அவரது தந்தைக்கு கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் என்ன நான்கு எல்லை காட்டி எழுதியுள்ளார் என்று தெரியுமா என்றால் கோபாலகிருஷ்ணன் நிலத்திற்கு கிழக்கு பொங்குராம்பட்டி பாதைக்கு தெற்கு தாசலிங்கம் நிலத்திற்கு வடக்கு துரைவேல் (என்னுடைய) வாதி செட்டில்மெண்ட் பத்திரத்தில் கோபாலகிருஷ்ணன் நிலத்திற்கு கிழக்கு ஏரிக்கு மேற்கு பாட்டைக்கு தெற்கு காசிலிங்கம் வகையறா நிலம் இருக்கு வடக்கு என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, சர்வே எண்,167.3 டில் மொத்தம் 15 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான், அதில் 21,4,1993 ல் நான் 2 சென்ட் கிரையம் பெற்றதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், வாதிக்கு அவரது தகப்பனார் எழுதிய செட்டில்மெனட் பத்திரத்தில் கண்ட விஸ்தீரணத்தைவிட குறைவாகத்தான் பட்டா வழங்கப்பட்டுளள்து என்றால் அவர் குறைவாகத்தான் வாங்கியுள்ளார், 21,4,1993 ல் நான் கிரயம் வாங்கியதாக சொல்வதற்கு பிறகு பட்டா மாற்றியுள்ளேனா என்றால் இல்லை, 11,6,2019 ல் தான் நான் பட்டா கோரி விண்ணப்பித்துள்ளதாக முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் பட்ட கோரி விண்ணப்பித்த பிறகு 31 12 2018 வாதியும் அவரது தகப்பனாரும் பட்டா மாற்ற மனு கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டு என்னை அசிங்கமான வார்த்தையால் திட்டியதாக எனது முதன்மை சாத்தியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் நான் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன் நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் வி சாலை கிராமத்தில் வசித்து வருகிறேன் வி, சாலை கிராமம் விக்கிரவாண்டி காவல் நிலைய அதிகார வரம்பிற்குள் வருகிறது என்றால் சரிதான் நான் விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்காமல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் நில அபகரிப்பு பிரிவு விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ளதால் அங்கு கொடுத்தேன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அந்த புகார் நில அபகரிப்பு பிரிவுக்கு மாற்றினாரா என்றால் மாற்றினார், நில அபகரிப்பு புகார் மீது மேல்விசாரணை ஏதாவது செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது நில அபகரிப்பு புகார் சம்பந்தமான எந்த முகாந்திரமும் இல்லை என்று அந்த புகார் மனு முடிக்கப்பட்டது என்றால் சரிதான் அதன் பிறகு விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் வாதி மற்றும் அவரது தந்தையார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செயய்யவும் புகாரை கோப்புக்கு எடுக்கவும் புகார் கொடுத்து இருந்தேன் என்றால் சரிதான் நான் கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிடப்பட்டு விக்கிரவாண்டி காவல் நிலைய

குற்ற எண் 29.2019 என பிரிவுகள் 120(பி), 423, 467, 468, 471 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது தெரியாது, 1993 முதல் 2019 வரை நடந்த உண்மை விவரங்களை மறைத்து வாதி மற்றும் அவர் தந்தையார் மீது நான் பொய்யான புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல நான் தாக்கல் செய்துள்ள படிபி,சா,ஆ 3 மற்றும் 4 ஆகியோர்களின் படி 13 ,9, 2021 அன்று விசாரணைக்கு வந்த போது விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் எந்தவித முகாந்திரமும் இல்லை என்று முடிக்கப்பட்டது என்றால் அவரவர் அனுபவிக்கும் நிலத்தை அவரவர் அனுபவிக்க வேண்டும் என்று தான் முடிக்கப்பட்டுள்ளதுநீதிமன்றத்தில் முடிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் நகலைபி,சா,ஆ 6 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான், நான் 21.4.1993 நிலம் வாங்கி 11 6 2019 வரை நான் பட்டா எதுவும் மாற்றாமல் 26 வருடம் அமைதியாக இருந்துவிட்டு இப்போதுதான் பட்டா மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான் வாதிக்கு அவரது தந்தையார் 12 சென்ட் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது உண்மை என்றால் சரிதான் அந்த 12 சென்ட் நிலத்திற்கு தீர்ப்பு வழங்குவதற்கு எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை என்றால் எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை 12 சென்ட் வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லி தான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான்

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram